## மட்டக்களப்பு மாநகர சபை

## மட்டக்களப்பு மாவட்டம்.

### 1. நிதிக் கூற்றுக்கள்

#### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 யூன் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மட்டகளப்பு மாநகர சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மட்டக்களப்பு மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

##### 1.3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,117,204. ஆகும்.

##### 1.3.2 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்டுள்ள விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| | 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (252 ஆவது அத்தியாயம்) | |
| (அ) | பிரிவு 253(1) | விடுதிகளில் வசிப்பவர்கள், வியாபாரிகள் மற்றும் மட்டக்களப்பிலுள்ள சந்தைகளில் கடைகளை வைத்திருக்கும் உரிமையாளர்கள் போன்றவர்களிடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 3.09 மில்லியன் கூட்டுத்தொகையான குத்தகை வாடகைகளை அறவீடு செய்வதற்கு மாநகர சபை ஆணையாளரினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிரிவு 242 | இரண்டு விடுதிகளிருந்து அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 28.26 மில்லியன் கூட்டுத்தொகையான ஆதனவரியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,699,982 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,500,424 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

மாநகர முதல்வர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான விடயம்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** |
| (i) | இறைகளும் வரிகளும் | 15,754 | 16,398 | 28,088 | 19,374 | 16,332 | 28,732 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 13,855 | 9,152 | 12,222 | 13,012 | 11,140 | 7,519 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,834 | 4,074 | 2,488 | 4,969 | 4,278 | 1,727 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 165 | 15,652 | 67 | 20,430 | 21,153 | 166 |

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** | **முரண்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** | **முரண்** |
| | **ரூபா000** | **ரூபா000** | **ரூபா000** | **ரூபா000** | **ரூபா000** | **ரூபா 000** |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 122,257 | 94,345 | 27,912 | 129,683 | 104,000 | 25,683 |
| ஏனையவை | 19,021 | 7,226 | 11,795 | 29,401 | 23,805 | 5,596 |
| உப மொத்தம் | 141,278 | 101,571 | 39,707 | 159,084 | 127,805 | 31,279 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | 89,377 | 11,557 | 77,820 | 120,000 | 26,467 | 93,533 |
| முழு மொத்தம் | 230,655 | 113,128 | 117,527 | 279,084 | 154,272 | 124,812 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| **பதவியினர் தரங்கள்** | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளபடியானது** |
| பதவிநிலைத் தரம் | 05 | 05 |
| இரண்டாம் தரம் | 61 | 61 |
| ஆரம்ப தரம் | 335 | 335 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | -- | 62 |
| | 401 | 463 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பெறவேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 8,487,617 ஆகும்.

### 2.5.2 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 280,293 ஆக இருந்ததுடன் 3 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாயிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 280,294 ஆகும்.

**2.5.3. மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வு /கணிப்பீட்டுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 322,005,438 ஆகும்.

**2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

**2.6.1 நிர்மாணிப்புகள் மீதும் வேலைகளின் பராமரிப்பு மீதும் பலவீனமான கட்டுப்பாடு**

நிர்மாணங்கள் மற்றும் பாரமரிப்பு வேலைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு வேலைக்குமான தொழிலாளர் மதிப்பீடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சகல நிர்மாண வேலைகளிலும் ஒவ்வொரு வேலை தொடர்பில் நாளாந்த தொழிலாளர்களை பயன்படுத்தல் மற்றும் செய்யப்படுகின்ற வேலைகளுக்காக நாளாந்த தொழிலாளர்களை விநியோகித்தல் என்பவற்றில் தொழிலாளர்களின் முறையான பங்கீட்டை உறுதிப்படுத்துவது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) கட்டுப்பாட்டு நோக்கங்களிற்காக வழங்கப்பட்டிருந்த பொருட்களின் விபரங்கள் மற்றும் வேலைகளிற்காக வழங்கப்பட்ட பொருட்களின் கிரயம் உரிய வேலைகளிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பின்வரும் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

i. களஞ்சியத்திற்கு திரும்பிய மூலப்பொருட்கள்

ii. கற்கள் மற்றும் கிரவலின் பதிவேடு

iii. ஒவ்வொரு செயற்பாட்டினதும் மதிப்பீடு மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கான ஒவ்வொரு விடயத்திலும் குறிப்புடன் வேலையின் விபரமான அளவைகளைத் தருகின்ற அளவைப் புத்தகம்

**2.6.2 களஞ்சியங்கள் மீதான பலவீனமான கட்டுப்பாடு**

(அ) பொருளிருப்புப் பதிவேடு மற்றும் களஞ்சியங்கள் பதிவேடு என்பன முறைப்படி பேணப்பட்டிருக்காததுடன் அலகுகளுடன் பொருட்கள் மற்றும் உபகரணங்களின்

பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் உத்தியோகத்தரால் பரிசோதித்து கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களஞ்சியங்களில் களஞ்சியப் பொருள் விடயங்களை முறையாக வகைப்படுத்தி ஒழுங்குபடுத்தி களஞ்சியப் பதிவேடுகளில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சாரப் பொருட்கள் இலங்கை மின்சாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய கணக்குகளில் எவ்வித சீராக்கல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வேலைத் தளத்திலிருந்து திருப்பப்பட்ட பாவித்த பொருட்கள் பாவித்த பொருட்களின் கீழ் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆற்று மண், கிரவல் மற்றும் பொருட்கள் போன்ற கட்டிடப் பொருட்கள் முறைப்படி பயன்படுத்தப்பட்டிருக்காமையினால் கையிலுள்ள உண்மையான இருப்பை அளவிடுவதற்கு மிகவும் கடினமாகவுள்ளது.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

**மாநகர சபை உறுப்பினர்களின் நிதிஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட வீதி ஒப்பந்த நிருவாகங்களில் காணப்பட்ட பொதுவான அவதானிப்புக்கள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) IX ஆவது பகுதியின் பிரகாரம் சபை உறுப்பினர்களுக்கு ஒப்பந்த வேலைகளின் நிதி ஒதுக்கீடுகளுக்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை.

(ii) கொள்வனவு வழிகாட்டிக்கு முரணாகவும், முறையான கேள்வி நடைமுறைகளின்றியும், கொள்வனவுக் குழுவின் தீர்மானங்கள் போன்றவைகளின்றி 35 சந்தர்ப்பங்களில் வீதியோர மலசலகூட நிர்மாணங்கள் மற்றும் குழாய்க்கிணறு வேலைகள் என்பன கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் என்பவற்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. இதனுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கூட்டுத்தொகை ரூபா 6,790 ஆகும்.

(iii) 1987 இன் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆவது அத்தியாயத்தின் 28 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் குழுவின் அறிக்கை பெறப்படாமல் மாநகர முதல்வரின் தீர்மானத்தின் அடிப்படையில் வீதி ஒப்பந்தங்கள் கிராம

அபிவிருத்திச் சங்கங்கள், பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சனசமூக நிலையங்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

(iv) கொள்வனவு வழிகாட்டி மற்றும் கையேடுகளின் 3.9.1 ஆம் பிரிவிற்கு முரணாக ஒப்பந்தங்களை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்குக் கையளிப்பதற்கு முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் சபை உறுப்பினர்களால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

(v) மேலே குறிப்பிடப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் புத்தங்கள் மற்றும் ஆவணங்களை பரிசோதனை செய்தபோது நிதி ரீதியில் பலவீனமாகவும், இயலளவுத் தன்மையில் குறைபாடாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் கொள்வனவு வழிகாட்டியின் 3.9.1 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொள்ளாமல் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

(vi) சனசமூக நிலையங்களுக்கு பல வீதி நிர்மாண ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. கொள்வனவு வழிகாட்டி மற்றும் முறைகளின் 3.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் (பிரஜா சன்வர்தன சங்கம் உள்ளுராட்சி பகுதிகளின் அபிவிருத்திக்காக பங்களித்தல்) ஒப்பந்தங்கள் சனசமூக நிலையங்களுக்கு வழங்க முடியாதிருந்தது.

(vii) செப்பனிடுதல், வீதி வேலைகளில் செம்மையாக மட்டப்படுத்துதல், அங்கீகரிக்கப்பட்ட கிரவலின் நிரப்புதலும் போக்குவரத்தும் மற்றும் அளவிடல் இயந்திரங்களை உபயோகித்து பரத்துதல் போன்றவைகள் திருப்தியற்ற முறையில் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) வருமான நிர்வாகம்